**திருவேற்காடு நகராட்சி**
**நகர்மன்ற சாதாரணக் கூட்டம்**

**2020 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30ம் நாள் திங்கட்கிழமை மாலை 5.30 மணிக்கு திருவேற்காடு நகராட்சி அலுவலகத்தில் நடைபெறும் நகர்மன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.**

**நகராட்சி அலுவலகம்,**
**திருவேற்காடு**
**நாள்: 30.11.2020**

**தனி அலுவலர் (ம) ஆணையர்,**
**திருவேற்காடு நகராட்சி.**

---

## பொருள் எண். 1

இந்நகராட்சியின் ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களின் அக்டோபர் மற்றும் நவம்பர் 2020 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–** மன்றம் பதிவு செய்யலாம்

**நகர்மன்ற தீர்மான எண்.1305** **நாள்.30.11.2020**

**தீர்மானம் : பதியப்பட்டது.**

---

## பொருள் எண். 2

இந்நகராட்சியில் பல்வேறு இனங்களுக்கான அக்டோபர் மற்றும் நவம்பர் 2020 மாதத்தின் செலவுச்சீட்டுகள் மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–_** மன்றம் பதிவு செய்யலாம்

**நகர்மன்ற தீர்மான எண்.1306** **நாள்.30.11.2020**

**தீர்மானம் : பதியப்பட்டது.**

---

## பொருள் எண். 3

இந்நகராட்சியில் அக்டோபர் மற்றும் நவம்பர் 2020ல் பதிவு செய்துள்ள பிறப்பு, இறப்பு, மற்றும் இறந்து பிறந்தகுழந்தைகளின் விவரம் மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–** மன்றம் பதிவு செய்யலாம்

**நகர்மன்ற தீர்மான எண்.1307** **நாள்.30.11.2020**

**தீர்மானம் : பதியப்பட்டது.**

---

## பொருள் எண்.4

இந்நகராட்சி எல்லைகுட்பட்ட பகுதிகளில் பொது நிதி 2020–21ன் கீழ் கீழ்க்கண்ட அடிப்படை வசதி பணிகளை மேற்கொள்ள 24.11.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | மாதிராவேடு கோ–ஆப்ரேடிவ் நகர் பகுதியில் புதியதாக ஆழ்துளை குழாய் கிணறு அமைத்தல். | 1.10 | 1.திரு.G.விஜயகுமார்<br>2.M/s.குமரேசன் கான்டராக்டர் | 0.10 % மதிப்பீட்டை விட குறைவு<br>0.45 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 2. | இந்நகராட்சி புதிய அலுவலக கட்டிடத்தினை தூய்மையாக பராமரித்துக் கொள்ள வெளிகொணர்வு (Out Sourcing) முறையில் பணியாளர்கள் சப்ளை செய்து பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல். | 5.40 | G.மதிவேலன்<br>K.அருண்குமார் | 0.15 % மதிப்பீட்டை விட குறைவு<br>0.85 % மதிப்பீட்டை விட அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | இந்நகராட்சி பகுதிகளில் வீட்டு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டு வரும் பகுதியில் குடிநீர் இல்லாத பகுதிகளுக்கும் குடிநீர் பைப் லைன் வசதி மேற்கொள்ளுதல். | 5.00 | 1.M/s. V.B.அசோசியேட்ஸ்<br><br>2.திரு.P.விஜயரகுநாதன் | 0.09 % மதிப்பீட்டை விட குறைவு<br>1.15 % மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு :–**

அ) மேற்படி பணிகளில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்க மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1308 நாள்.30.11.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.5

இந்நகராட்சி எல்லைகுட்பட்ட பகுதிகளில் பொது நிதி 2020–21ன் கீழ் கீழ்க்கண்ட அடிப்படை வசதி பணிகளை மேற்கொள்ள 26.11.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | கீசன் நகர் பகுதியில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் மூடுபலகைகள் அமைத்தல். | 7.00 | 1.P. ரகு<br><br>2.J.இளங்கோ | 0.12 % மதிப்பீட்டை விட குறைவு<br>0.65 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 2. | இராஜாங்குப்பம் யாதவர் தெருவிற்கு சிமெண்ட் தளம் மற்றும் பேவர் பிளாக் அமைத்தல். | 9.90 | 1.M./s.ஆரோக்கியநாதன் கண்ஸ்ட்ரக்ஸன்<br><br>2.திரு. V.பார்த்திபன் | 0.15 % மதிப்பீட்டை விட குறைவு<br>0.75 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 3. | இராஜாங்குப்பம் பெருமாள் கோயில் தெருவிற்கு பேவர் பிளாக் வசதி மேற்கொள்ளுதல். | 3.00 | 1.M./s.ஆரோக்கியநாதன் கண்ஸ்ட்ரக்ஸன்<br><br>2.திரு. V.பார்த்திபன் | 0.05 % மதிப்பீட்டை விட குறைவு<br>0.70 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 4. | லோட்டஸ் நகர் பிரதான சாலையில் உள்ள பகுதிகளை செப்பணிடும் பணி மேற்கொள்ளுதல். | 8.50 | 1.M/s.Apex Civil Engineering<br><br>2.M/s.Jupiter & Co | 0.10 % மதிப்பீட்டை விட குறைவு<br>0.90 % மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு :–**

அ) மேற்படி பணிகளில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்க மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1309 நாள்.30.11.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.6

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.8ல் உள்ள காமாட்சி தெரு உள்ள சாலை பழுதடைந்து உள்ளதாலும் மேற்படி சாலையினை தார்தளமாக புதுப்பிக்கவும், மேலும், தெருவீதியம்மன் கோயில் குறுக்கு தெருவில் உள்ள சாலை மிகவும் பழுதுதடைந்து குண்டும் குழியுமாக உள்ளதாலும், மழைக்காலத்தில் மழைநீர் தேங்குவதால் பொது மக்கள் வந்து செல்ல இடையூறாக உள்ளது. எனவே, பொது மக்களின் பயன்பாட்டின் அவசியத்தினை கருதி, மேற்கண்ட சாலைக்கு பேவர் பிளாக் வசதிகள் மேற்கொள்ளவும், மேற்படி பணிகளுக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணியினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1310 நாள்.30.11.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.7

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.4ல் உள்ள வானகரம் அம்பத்தூர் பிரதான சாலையில்(மாந்தோப்பு சாலை சந்திப்பு) மழைநீர் தேங்கி வெளியேற வழிவகை இல்லாத நிலையில் உள்ளதால், பொதுமக்களுக்கும், வாகன ஓட்டிகளுக்கும் இடையூறாகவும், பொது சுகாதார கேடு விளைவிக்கும் வகையில் உள்ளது. எனவே, பொது மக்கள் பயன்பாட்டின் அவசியத்தினை கருதி, மேற்கண்ட பகுதிக்கு மழைநீர் வடிகால்வாய் மற்றும் மூடுபலகைகள் அமைக்கும் பணியினை மேற்கொள்ள அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.9.80 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணியினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்

**நகர்மன்ற தீர்மான எண்.1311 நாள்.30.11.2020**

**தீர்மானம் : அ மற்றும் ஆ அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.8

திருவேற்காடு நகராட்சி புதியதாக கட்டப்பட்டுள்ள அலுவலக கட்டிடத்தில் ஆணையாளர் அறை, வரிவசூல் மையம், கணினி பிரிவு, பொது பிரிவு, வருவாய் பிரிவு, நகராட்சி பொறியாளர் அறை, பொதுப்பணி மேற்பார்வையாளர் அறை, பொறியியல் பிரிவு, நகரமைப்பு பிரிவு, சுகாதார பிரிவு போன்ற பல்வேறு பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி பிரிவுகளுக்கு தேவையான குளிர்சாதன வசதி (Air Conditioner) மேற்கொள்ள வேண்டியுள்ளதால், அதற்கு தேவையான குளிர்சாதனங்களை புதியதாக வாங்கி பொருத்திடவும் அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.5.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணியினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1312 நாள்.30.11.2020**

**தீர்மானம் : அ மற்றும் ஆ அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.9

திருவேற்காடு நகராட்சி புதியதாக கட்டப்பட்டுள்ள அலுவலக கட்டிடத்தில் ஆணையாளர் அறை, வரிவசூல் மையம், கணினி பிரிவு, பொது பிரிவு, வருவாய் பிரிவு, நகராட்சி பொறியாளர் அறை, பொதுப்பணி மேற்பார்வையாளர் அறை, பொறியியல் பிரிவு, நகரமைப்பு பிரிவு, சுகாதார பிரிவு போன்ற பல்வேறு பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி பிரிவுகளுக்கு தேவையான அலுமினியம் தடுப்புகள், அலமாரிகள் மற்றும் கணினிகள் பயன்படுத்த தேவையான அலமாரிகள் போன்றவைகளை அமைத்துக்கொள்ளவும் அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.9.70 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணியினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1313 நாள்.30.11.2020**

**தீர்மானம் : அ மற்றும் ஆ அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.10

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.18ல் உள்ள உள்ள கோலடி அருள்நகர் தெருவில் உள்ள சாலை பழுதுதடைந்துள்ளதால் வாகன ஓட்டிகளுக்கும் மற்றும் போக்குவரத்து இடையூறாகவும் உள்ளது. எனவே, பொது மக்களின் பயன்பாட்டின் அவசியத்தினை கருதி மேற்கண்ட சாலைக்கு தார்தளம் அமைக்க அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணியினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1314** **நாள்.30.11.2020**

**தீர்மானம் : அ மற்றும் ஆ அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.11

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.5ல் உள்ள இராஜாங்குப்பம் பாடசாலை தெரு வழியாக அடையாளம்பட்டு கிராமம் மற்றும் NH 45 செல்லும் இணைப்பு சாலையாகும்,இந்த சாலையில் அதிக வாகனங்கள் செல்வதாக போக்குவரத்து காவல்துறை கேட்டற்கு இனங்க இந்த சாலையினை அகலப்படுத்தி தார் சாலை அமைக்க அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.8.20 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணியினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1315** **நாள்.30.11.2020**

**தீர்மானம் : அ மற்றும் ஆ அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.12

இந்நகராட்சியில் எல்லைக்குட்பட்ட வார்டு எண்.5 மற்றும் 6 உள்ள பெருமாளகரம் கணபதி தெரு, யாதவாள் தெரு, மெட்ரோ சிட்டி 2வது பிரதான சாலை மற்றும் குறுக்கு தெருவிற்கு பொது மக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் மேற்கொள்ளவும், மேற்கண்ட பகுதிகளில் குடிநீர் பைப்லைன் வசதி இல்லாததால், தடையின்றி குடிநீர் வழங்கிட ஏதுவாக மேற்படி பகுதியில் புதியதாக பைப்லைன் விஸ்தரிப்பு செய்திட அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.3.30 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணியினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1316** **நாள்.30.11.2020**

**தீர்மானம் : அ மற்றும் ஆ அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண். 13

மேல் அயனம்பாக்கம், கீழ் அயனம்பாக்கம், காடுவெட்டி மற்றும் கோலடி பகுதியில் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான கழிப்பறை கட்டிடத்தில் பழுது ஏற்பட்டுள்ளதால் பொதுமக்களுக்கு இடையூறாகவும், பொது சுகாதார கேடு விளைவிக்கும் வகையில் உள்ளது. எனவே, பொது மக்கள் பயன்பாட்டின் அவசியத்தினை கருதி, மேற்கண்ட கழிப்பறை கட்டிடத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்து பயன்பாட்டிற்குண்டான பணியினை மேற்கொள்ள அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.6.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

**அ)** அனுமதி அளிக்கலாம்.

**ஆ)** மேற்படி பணியினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1317 நாள்.30.11.2020**

**தீர்மானம் : அ மற்றும் ஆ அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.14

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட 18 வார்டுகளிலும் தினசரி பொது சுகாதாரம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. மேலும் பேருந்து நிலையம், சமுதாய கூடங்கள், வணிக வளாகங்கள் மற்றும் பொது மக்களிடையே கொரோனா வைரஸ் விழிப்புணர்வு ஏற்படும் வகையில், (covid 19) என்ற தொற்று நோய் பரவாமல் தடுக்கவும், நகராட்சி நிர்வாக ஆணையாளர் மற்றும் நகராட்சிகள் மண்டல நிர்வாக இயக்குனர் செங்கற்பட்டு மண்டலம் அவர்களின் அறிவுரையின்படியும் கொரோனா வைரஸ் தொற்று நோயினால் பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்ட ஒவ்வொரு தெருக்களிலும் இரண்டு பக்கங்களில் வாகனம் மூலம் மின் மோட்டார் பொருத்தி தினசரி கிருமி நாசினி தெளித்து கொரோனா வைரஸ் நோயினை கட்டுப்படுத்திட, லைசால் என்னும் கிருமி நாசினி தற்போது போதிய அளவு இருப்பு இல்லாததாலும் பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் பணிகள் மேற்கொள்ள ஆணையர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, **லைசால்** என்னும் கிருமி நாசினி 2500 லிட்டர் கொள்முதல் செய்தமைக்கும் இதற்கான ஆகும் செலவினம் ரூ.8.26 இலட்சத்திற்கு வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் பதிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது

**ந.க. எண்.961/2020/எச்1.**

**அலுவலக குறிப்பு:–**

பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1318 நாள்.30.11.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.15

இந்நகராட்சி பகுதியில் கொரோனா வைரஸ் நோய் தொற்றினை கட்டுப்படுத்திட லைசால் கிருமி நாசினியை கொரோனா பாதித்த பகுதிகளில் தெளிக்கவும் மற்றும் நோய் தொற்றினால் பாதிக்கப்பட்ட அவ்வீட்டை சுற்றிலும் லைசால் தெளிக்க விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் ஒப்புதலுக்கும்.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | பணியின் விவரம் | கொள்ளளவு | தொகை |
|---|---|---|---|---|
| 1. | ஸ்ரீ பாலாஜி மார்க்கெட்டிங் Exportor and Distributors No. 9-5-1.பஜார் தெரு, முதல்மாடி, அய்யம்பாளையம், திண்டுக்கல். பின்கோடு –624204. | பொது சுகாதாரம் கொரோனா பாதித்த பகுதிகளில் கிருமி நாசினி தெளிக்க லைசால் கிருமி நாசினி சப்ளை செய்தல். | 1 லிட்டர் +GST | ரூ.280/– |
| 2. | ஸ்ரீ விநாயகா பார்மா, எண். 33, வெங்கட்ட ரமணன் தெரு, பொள்ளாச்சி கோயம்புத்தூர், பின்கோடு– 642001. | | 1 லிட்டர் +GST | ரூ.320/– |

மேற்படி பட்டியலின்படி வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளியினை வழங்கிய நிறுவனமான **ஸ்ரீ பாலாஜி மார்க்கெட்டிங்** நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று மற்றும் பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1319 நாள்.30.11.2020**

**தீர்மானம் : அ மற்றும் ஆ அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.16

திருவேற்காடு நகராட்சி 18 வார்டுகளிலும் பொது சுகாதாரப் பணிகள் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் தெருவோரம் சிறுநீர் கழிப்பது மற்றும் மலம், மலம் கழிப்பது தடுக்கப்பட்டு தூய்மை நகராட்சியாக பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது. மேலும், பருவகால மாறுப்பாட்டினால் பெய்துவரும் புயல்காற்று மற்றும் கனமழையினால் டெங்கு நோய் ஏற்பட சூழல் ஏற்படும் என்பதாலும், மழைகாலங்களில் கொசுக்கள் அதிகளவில் இனப்பெருக்கம் செய்யும் காலமாவதால், மேலும், தெருவோரங்களில் மழைநீர் தேங்கி நிற்பதால் கொசுக்கள் முட்டையிட்டு இனப்பெருக்கம் செய்ய வாய்ப்பு ஏற்படும் என்பதாலும், மேலும், குடியிருப்புகளில் உள்ள கழிவுநீர் தொட்டி பைப்புகளில் உள்ள துவாரம் வழியாக கொசுக்கள் உள்ளே சென்று தங்கி முட்டையிட்டு கொசுக்கள் உற்பத்தி ஆகும் என்பதால் கொசுக்கள் இனப்பெருக்கம் செய்வதை தடுக்கும் பொருட்டு மேற்படி கழிவுநீர் தொட்டி (Septick Tank) பைப்புகளில் கொசுக்கள் உள்ளே செல்லாமல் இருக்க 1.1/2 நீளம் 1 அடி அகலம் கொண்ட வகையில் **கொசுவலை** கொண்டு மூடினால் கொசுக்கள் உள்ளே செல்வது தடுக்கப்படுவதுடன் டெங்கு நோய் கட்டுப்படுத்தப்படும் என்பதால், 1.1/2 நீளம் 1 அடி அளவில் 30,000 எண்ணிக்கையில் முதல் தவனையாக கொள்முதல் செய்திட ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள ஆணையர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ளவும் மற்றும் இதற்கான ஆகும் செலவினம் ரூ.9.90 இலட்சத்திற்கு வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1320 நாள்.30.11.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.17

திருவேற்காடு நகராட்சி பகுதியில் உள்ள 18 வார்டுகளிலும் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பொது சுகாதாரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. இந்நகராட்சி பகுதியில் சேகரிக்கப்படும் குப்பைகள் மக்கும் மற்றும் மக்காத குப்பை என தரம் பிரித்து சேகரம் செய்யப்பட்டு மக்கும் தன்மை கொண்ட குப்பைகள் முதல் நிலையிலேயே பசுமை உரக்குடிலுக்கு எடுத்துச் செல்லப்பட்டு இயற்கையான முறையில் உரம் தயாரிக்கப்பட்டு பொதுமக்களுக்கு இலவசமாக வினியோகம் செய்யப்பட்டு வரப்படுகிறது. மேலும், மேற்படி நகராட்சி பகுதியில் அமைந்து உள்ள 7(MCC) பசுமை உரக்குடிலில் பராமரிப்பு பணி மேற்கொள்ளவும் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ளவும் 15 பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் வெளிக்கொணர்வு முறையில் தருவித்திட (Out sourcing) ஒப்பந்தப்புள்ளி கோரவும் மற்றும் இதற்கான செலவினம் ரூ.9.50 இலட்சத்திற்கு பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கும் மற்றும் பதிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1321 நாள்.30.11.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.18

திருவேற்காடு நகராட்சி பகுதியில் உள்ள 18 வார்டுகளை உள்ளடக்கி ஏறத்தாழ 1 இலட்சம் மக்கள் தொகை கொண்ட நகரமாகும். இந்நகரில் பரப்பளவு 28.50 சதுர கிலோ மீட்டர் ஆகும். வளர்ந்து வரும் இந்நகராட்சியினை தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் தூய்மை செய்யும் பணியினை 242 வெளிக்கொணர்வு முறையில் நியமிக்கப்பட்ட துப்புரவு பணியாளர்களும் 17 நிரந்தர பணியாளர்களும் மேற்கொள்கின்றார்கள். மேலும், இங்கு 7 நுண் உர செயலாக்க

மையங்களும், 10 நிகழ்விட உரக்குடில்களும் உள்ளன. புகழ்பெற்ற திருவேற்காடு கருமாரியம்மன் கோயில் இங்கு உள்ளது. நகரில் சிறிய மற்றும் பெரிய தொழிற்சாலைகள் நிறைய உள்ளன. எனவே, தினசரி இந்நகருக்கு 1 இலட்சம் அளவிலான மக்கள் வந்து செல்கின்றனர். சென்னையை ஒட்டி அமைந்துள்ள இந்நகரில் தொடர்ந்து, திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை சிறப்புடன் செயல்படுத்தவும், அதனை தொடர்ந்து, பொது சுகாதாரப் பணிகள் மேற்கொள்வது மிகவும் அவசியமான பணியாகும். எனவே, கொரோனா வைரஸ் நோய் தொற்றினால் பாதிக்கப்பட்ட வீடுகள் சுற்றிலும் மற்றும் அப்பகுதி முழுவதும் நீர்த்த சுண்ணாம்பு கிருமி நாசினியை காலை, மாலை என இருவேளைகளில் தெளிக்க வேண்டியுள்ளது என துப்புரவு ஆய்வாளர் அவர்களின் 01.10.2020 தேதிய குறிப்பில் கேட்டுக்கொண்டுள்ளதை தொடர்ந்து, நீர்த்த சுண்ணாம்பு கொள்முதல் செய்திட, ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள நகராட்சி ஆணையர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, **நீர்த்த சுண்ணாம்பு** 25 மெட்ரிக் டன் கொள்முதல் செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரவும் மற்றும் இதற்கான ஆகும் தோராய செலவினம் ரூ. 5.00 இலட்சத்திற்கு பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1322** **நாள்.30.11.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## <u>பொருள் எண்.19</u>

திருவேற்காடு நகராட்சி பகுதியில் உள்ள 18 வார்டுகளை உள்ளடக்கி ஏறத்தாழ 1 இலட்சம் மக்கள் தொகை கொண்ட நகரமாகும். இந்நகரில் பரப்பளவு 28.50 சதுர கிலோ மீட்டர் ஆகும். வளர்ந்து வரும் இந்நகராட்சியினை தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் தூய்மை செய்யும் பணியினை 242 வெளிக்கொணர்வு முறையில் நியமிக்கப்பட்ட துப்புரவு பணியாளர்களும் 17 நிரந்தர பணியாளர்களும் மேற்கொள்கின்றார்கள். மேலும், இங்கு 7 நுண் உர செயலாக்க மையங்களும், 10 நிகழ்விட உரக்குடில்களும் உள்ளன. புகழ்பெற்ற திருவேற்காடு கருமாரியம்மன் கோயில் இங்கு உள்ளது. நகரில் சிறிய ம ற்றும் பெரிய தொழி ற் சாலைகள் நிறைய உள்ளன. எனவே, தினசரி இந்நகருக்கு 1 இலட்சம் அளவிலான மக்கள் வந்து செல்கின்றனர். செ ன் னையை ஒட்டி அமைந்துள்ள இந்நகரில் தொடர்ந்து, திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை சிறப்பு ட ன் செயல்படுத்தவும், அதனை தொடர்ந்து, பொது சுகாதாரப் பணிகள் மே ற்கொள்வது மிகவும் அவசியமான பணியாகும். எனவே, அனைத்து பணியாளருக்கும் பணிபுரிய தேவையான உபகரணங்கள், தளவாடப் பொருட்கள் வாங்கி வழங்க வேண்டியுள்ளது என துப்புரவு ஆய்வாளர் அவர்களின் 01.10.2020 தேதிய குறிப்பில் கேட்டுக்கொண்டுள்ளதற்கிணங்க தளவாடப் பொருட்கள் கொள்முதல் செய்திட ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள நகராட்சி ஆணையர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, **தளவாடப் பொருட்கள்** கொள்முதல் செய்யவும், இதற்கான ஆகும் தோராய செலவினம் ரூ. 4.00 இலட்சத்தி ற்கு பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1323** **நாள்.30.11.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## <u>பொருள் எண்.20</u>

திருவேற்காடு நகராட்சி பகுதியில் உள்ள 18 வார்டுகளிலும் கொரோனா வைரஸ் **(Covid 19)** தொற்றுநோய் பரவாமல் தடுக்கவும், மற்றும் பேருந்து நிலையம் சமுதாய கூடங்கள், வணிக வளாங்கள் மற்றும் பொது மக்களிடையே கொரோனா வைரஸ் குறித்து விழிப்புணர்வு ஏற்படும் வகையில் கொரோனா வைரஸ் நோயை கட்டுப்படுத்தவும், நகராட்சிகள் நிர்வாக ஆணையர் மற்றும் நகராட்சிகள் நிர்வாக மண்டல இயக்குனர் அவர்களின் அறிவுரைகளின்படி **பிளிச்சிங் பவுடர்** கிருமி நாசினி போதிய அளவு இருப்பு வைக்க அறிவுறுத்தப்பட்டதை தொடர்ந்து, இந்நகராட்சி துப்புரவு ஆய்வாளர் அவர்களின் 20.10.2020 தேதிய குறிப்பின்படி பிளிங்சிங் பவுடர் 2000 கிலோ கொள்முதல் செய்திட தற்போது மத்திய

மாநில அரசுகளின் 144 தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்டு உள்ளதால் புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள காலதாமதம் ஆகும் என்பதாலும், மேலும், கொரோனா வைரஸ் – தொற்று நோய் வேகமாக பரவும் காலமாக உள்ளதாலும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் விலைப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள நகராட்சி ஆணையர் அவர்கள் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, **பிளிச்சிங் பவுடர் 2000** கிலோ கொள்முதல் செய்யவும், இதற்கான ஆகும் தோராய செலவினம் ரூ.1.20 இலட்சத்திற்கு பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**ந.க.எண்.3722/2020/எச்1**

**அலுவலக குறிப்பு:–**

பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்ட ம் 1920 பிரிவு 15–ன் கீழ் நடவடிக்கை மேற்கொண்டதற்கு மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1324** **நாள்.30.11.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.21

திருவேற்காடு நகராட்சி பகுதியில் உள்ள 18 வார்டுகளிலும் கொரோனா வைரஸ் **(Covid 19)** தொற்றுநோய் பரவாமல் தடுக்க பொது மக்களிடையே கொரோனா வைரஸ் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் தூய்மை பணியாளர்கள் பாதுகாப்புடன் இருக்கவும், கொரோனா நோயினால் பாதிக்கப்பட்டவர்களிடம் பாதுகாப்புடன் தூய்மை பணி ஆற்றிடவும் **முழு அளவு பாதுகாப்பு கவச உடை (PPE)** இருப்பு வைக்கப்பட்டிருக்க வேண்டும். மேலும், நகராட்சி பகுதியில் தொடர்ந்து கொரோனா வைரஸ் தொற்று நோய் அதிகமாகி வருவதால் முழு அளவிலான பாதுகாப்பு கவச உடை (PPE) போதிய அளவு நகராட்சியில் இருப்பு இல்லாததாலும், 500 எண்ணிக்கையில் முழு அளவிலான பாதுகாப்பு கவச உடை (PPE) பணியின் அவசர அவசியம் கருதி பணிகள் மேற்கொள்ளவும், மேலும் கொரோனா வைரஸ் – தொற்று நோய் பரவும் காலமாக உள்ளதாலும் தற்போது மத்திய மாநில அரசுகள் 144 தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்ட நடைமுறையில் உள்ளதால், புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள காலதாமதம் ஆகும் என்பதாலும், நகராட்சி ஆணையர் அவர்களால் விலைப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, உள்ளூர் மற்றும் வெளியூர், தனியார் நிறுவனங்களிடம் விலைப்புள்ளி கோரி பணிகள் மேற்கொண்டமைக்கும் மேலும், இதற்கான செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கும் மற்றும் பதிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மற்றும் செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1325** **நாள்.30.11.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.22

திருவேற்காடு நகராட்சியில் 1 பொது கழிப்பறையும் 10 சமுதாய கழிப்பறைகள் உள்ளன. மேலும், இந்நகராட்சி பகுதியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் அனைத்து கழிப்பறைகளையும், அதற்கென்று வரையறுக்கப்பட்ட அம்சங்களுடன் பராமரிக்கப்பட வேண்டும் என தூய்மை பாரத இயக்கத்தில் சாரம்சமாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இந்நகராட்சி பகுதியில் Open Defection Free – ஆக உள்ளதா என கண்டறிய ஆய்வு செய்வதற்காக தூய்மை பாரத இயக்கத்தினை சேர்ந்த குழு ஆய்வு செய்ய உள்ளதால் கழிப்பறைகளின் தரம் அதன் அம்சங்கள் கண்காணிக்கப்பட்டு தரச்சான்றிதழ் மற்றும் மதிப்பெண்கள் வழங்க உள்ளதால் பொது மற்றும் சமுதாய கழிப்பறைகளுக்கு தேவையான பொருட்கள் வாங்கி வழங்கிடவும் மற்றும் இதற்கான ஆகும் தோராய செலவினம் ரூ.3.50

இலட்சத்திற்கு பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கும் மற்றும் பதிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**தேவைப்படும் பொருட்கள் :–**

| | | | |
|---|---|---|---|
| 1. | முகம் பார்க்கும் கண்ணாடி | – | 10 No |
| 2. | சோப்பு | – | 50 No |
| 3. | கால்மிதியடி | – | 22 No |
| 4. | நாப்கின் Bin | – | 30 No |
| 5. | வாளி ( சிறியது) | – | 50 No |
| 6. | Hand Wash | – | 22 No |
| 7. | Brush | – | 22 No |
| 8. | ஓடோநில் | – | 40 No |
| 9. | பூந்தொட்டி | – | 30 No |
| 10. | டவல் | – | 40 No |
| 11. | பேனர்(3x2 அடி ) | – | 20 |
| 12. | Flex board | – | 10 No |

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மற்றும் செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1326** **நாள்.30.11.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

**தனி அலுவலர் (ம) ஆணையர்,**
**திருவேற்காடு நகராட்சி.**

/உண்மை நகல்/
ஆணையர்
திருவேற்காடு நகராட்சி